**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | கபிலவன், வயது 28 |
| Father Name/Husband Name | : | அன்பழகன் |
| Village | : | ராஜபாளையம் |
| Taluk | : | ராஜபாளையம் |
| Calling | : | பட்டன் பிட்டிங் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது ராஜபாளையத்தில் வசித்து பட்டன் பிட்டிங் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை தெரியும். நான் சம்பவ சமயத்தில் நேஷனல் பொறியியல் கல்லூரியில் படித்தேன். கடந்த 04.03.2024 ஆம் தேதி மதியம் 02.00 – 02.30 மணியளவில் எங்கள் கல்லூரிக்குள் உள்ள Professor அ.சா.1 ன் அறைக்குள் அவரைப் பார்ப்பதற்காக நான், சக்கரவர்த்தி, எதிரி ஆகியோர் சென்று Project review சம்பந்தமாக பேசிவிட்டு நானும், சக்கரவர்த்தியும் வெளியே வந்து விட்டோம். உள்ளே சத்தம் கேட்டது. உடனே நாங்கள் உள்ளே போனனோம். எதிரி அ.சா.1 யை அடித்து கொண்டிருந்தார். நாங்கள் இருவரையும் பிடித்தோம். சத்தம் கேட்டு சுடலையாண்டி மற்றும் ஜெயவேல் சார்கள் வந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2 Project review விற்கு நாங்கள் மூன்று பேரும் ஒன்றாக சென்றோம். முதலில் எதிரியின் project தான் review செய்யப்பட்டது. அதன் பிறகு சக்கரவர்த்தியின் project review செய்யப்பட்டது. மூன்றாவதாக எனது project review செய்யப்பட்டது. எங்களுடைய Project ன் ஒருங்கிணைப்பாளர் அ.சா.1

என்பதால் அவர்தான் Project யை ஆய்வு செய்வார். எங்களது Project யை ஆய்வு செய்வது அ.சா.1 மட்டும் தான், HOD கிடையாது. எனது மற்றும் சக்கரவர்த்தியின் Project யை இவ்வழக்கு சம்பந்திற்கு முன்பே அன்றைய தினம் அ.சா.1 ஆய்வு செய்து முடித்துவிட்டார்.

3 எங்களுடைய Project ஆய்வு முடிந்த உடன் நானும், சக்கரவர்த்தியும் வெளியே வந்துவிட்டோம். மேற்படி விவரத்தை எனது HOD யிடமும், போலீசார் விசாரணையிலும் நான் சொன்னேன். நான் அ.சா.1 ன் அறைக்குள் சென்று பார்த்தபோது அ.சா.1 கண்ணாடி அணிந்திருந்தார். அ.சா.1 எப்போதும் கண்ணாடி அணிந்திருப்பார். அந்த அறை 10 X10 அளவில் இருக்கும். அந்த அறையில் சிசிடிவி கேமரா கிடையாது. சம்பவத்தின்போது நானும், சக்கரவர்த்தியும் வெளியே வரும்போது அ.சா.1 ம், எதிரியும் இருந்தார்கள். அவர்களுக்கு என்ன பேசி கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டுதான் உள்ளே சென்றேன்.

4 எதிரி, அ.சா.1 யை எப்படி அடித்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக கண்ணாடி அணிந்திருக்கும் நபரை கையால் முகத்தில் குத்தும்போது கண்ணாடி உடைந்து இரத்தம் வரும் என்றால் வரும். எதிரியின் Project யை சம்பவத்தன்று அ.சா.1 பார்வையிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் சத்தம் கேட்டு திரும்ப அ.சா.1 ன் அறைக்குள் சென்றபோது எதிரியும், அ.சா.1 ம் இருந்தார்கள். எதிரி, அ.சா.1 யை தாக்கியதாகவும், நானும், சக்கரவர்த்தியும் சென்று அவர்களை பிடித்தாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா.1 எங்கள் கல்லூரியின் பேராசிரியர் என்பதால் அவரின் அழுத்ததத்தின் பேரிலும், அவர் கேட்டுக்கொண்டதன் பேரிலும் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அ.சா.1 ன் அறைக்கு வெளியே நான் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.